**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 31 ஜனவரி 2020

Nestlé
Good Food, Good Life

# 2025 ஆம் ஆண்டிற்குள், பொதியிடலில் 100% மீள்சுழற்சிற்கான நெஸ்லே லங்காவின் செயற்திட்டம்

*'Making My Sri Lanka More Sustainable' (எனது இலங்கையை மேலும் நிலைபேறு கொண்டதாக மாற்றுதல்) என்ற பிரச்சாரத்தின் கீழ் பசுமை பேணும் முன்னெடுப்புக்களை ஆரம்பித்துள்ளது*

நெஸ்லே லங்கா நிறுவனம் தனது பொதியிடலை 2025 ஆம் ஆண்டளவில் 100% மீள்சுழற்சி அல்லது மீள்பயன்பாடு கொண்டதாக மாற்றும் அர்ப்பணிப்புடன் இயங்கி வருகின்றது. பிளாஸ்திக் அடங்கலாக தனது பொதியிடல் சாதனங்கள் எவையும் மண்ணையோ, குப்பைத்தொட்டியையோ சென்றடைவதை தவிர்ப்பதே அதன் குறிக்கோள். தேசத்தைச் சுத்தமாகவும், பசுமையாகவும் பேணுவதை முன்னெடுத்துச் செல்லும் இந்த 'நல் உணவு நல் வாழ்வுக்கான' நிறுவனம் தனது 'Making My Sri Lanka More Sustainable' (எனது இலங்கையை மேலும் நிலைபேறு கொண்டதாக மாற்றுதல்) என்ற பிரச்சாரத்தின் கீழ் பசுமை பேணுதல் தொடர்பான பல்வேறு முன்னெடுப்புக்களை ஆரம்பித்துள்ளது.

*''இலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு நிறுவனம் என்ற வகையில், பொதியிடல் காரணமாக சூழலுக்கு ஏற்படுகின்ற தாக்கத்தைக் குறைத்து பூமியைப் பேணிப் பாதுகாப்பது எமது கடமையும், பொறுப்பும் என நாம் நம்புகின்றோம். தனது வர்த்தகநாமங்கள், உற்பத்திகள் மற்றும் தொழிற்பாடுகளில் நிலைபேற்றை ஒருங்கிணைப்பதில் நெஸ்லே நிறுவனம் மிக நீண்ட காலமாக பல்வேறு பணிகளை முன்னெடுத்து வந்துள்ளது. இலங்கையிலுள்ள நெஸ்லே அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அனைத்தும் பிளாஸ்திக் கழிவற்ற கலாச்சாரத்தை முன்னெடுத்து வருவதுடன், இந்த ஆண்டு ஏப்ரல் முதல் பிளாஸ்திக்கிலான விளம்பர ஊக்குவிப்புப் பொருட்களை நிறுத்துவதற்கான வழிமுறைகளை மிகவும் கவனமாக முன்னெடுத்து வருகின்றன. இந்த முன்னெடுப்பினூடாக 2020 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 250 மெட்ரிக் தொன் பிளாஸ்திக்கை இல்லாதொழிக்க எம்மால் முடியும்,''* என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஃபேப்ரிஸ் கவாலீன் அவர்கள் குறிப்பிட்டார்.

*''குருணாகலிலுள்ள எமது தொழிற்சாலையானது 'அப்புறப்படுத்தும் எவ்விதமான கழிவுகளுமற்ற' (zero waste for disposal) அந்தஸ்தை அடையப்பெற்றுள்ளதை, அதாவது உற்பத்தி நடைமுறையில் எதுவும் நிலப்பரப்பை சென்றடையாது அல்லது எரிசக்தியானது மீட்கப்படாமல் விரயமாக்கப்படுவதில்லை என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்,''* என ஃபேப்ரிஸ் கவாலீன் இவர்கள் மேலும் குறிப்பிட்டார். *''எனது இலங்கையை மேலும் நிலைபேறு கொண்டதாக மாற்றுவதில் நாம் ஏராளமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதுடன், அவற்றை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம். எனினும் எம்மால் இன்னும் ஏராளமானவற்றை செய்ய முடியும் என நாம் உணர்கின்றோம். அதனால், இலங்கையில் எமது பிளாஸ்திக் கழிவுகளை மேலும் குறைத்து, 2025 ஆம் ஆண்டளவில் எமது பொதியிடலை 100% மீள்சுழற்சி அல்லது மீள்பயன்பாடு கொண்டதாக மாற்றும் அர்ப்பணிப்புடன் புதிய, சவால்மிக்க செயற்திட்டங்களை நாம் கையிலெடுத்துள்ளோம்,''* என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

சமீபத்தைய முன்னெடுப்பாக, பாடசாலைகளில் முறையான கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கல்வி அமைச்சு மற்றும் மத்திய சுற்றுச்சூழல்

அதிகார சபையுடன் நெஸ்லே கைகோர்த்துள்ளது. இந்தக் கூட்டாண்மையினூடாக பாடசாலை சுற்றுச்சூழலியல் சங்கங்களுக்கு அறிவூட்டும் முயற்சிகளை மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை முன்னெடுக்கவுள்ளதுடன், இந்த நற்காரியம் தொடர்பான விழிப்புணர்வை இலங்கையின் எதிர்கால தலைமுறைகள் மத்தியில் வலுவூட்டவுள்ளது. 150,000 இற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பாடசாலை வளாகங்களில் கழிவுகளை முறையாக சேகரித்து, தரம் பிரிக்கும் முறைமையை ஏற்படுத்துவதற்காக இப்பாடசாலைகளுக்கு கழிவு முகாமைத்துவத் தொகுதிகளை நெஸ்லே நன்கொடையளிக்கவுள்ளது.

மேலும், இலங்கையில் முதன்முதலாக UHT பால் அட்டை மீள்சுழற்சி தொழிற்சாலையொன்றை அறிமுகப்படுத்துவதில் Tetra Pak மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினருடன் இணைந்து பணியாற்றி நெஸ்லே அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்ததுடன், 2020 மார்ச்சில் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நிலம் நீர் மற்றும் சமுத்திரங்களில் பொதியிடல் மூலப்பொருட்கள் கழிவுகளாக சென்றடைவதைத் தடுப்பது நெஸ்லேயின் அர்ப்பணிப்பிற்கான முக்கியமான காரணங்களுள் ஒன்றாகும்.

நெஸ்லே நிறுவனத்தின் 'Making My Sri Lanka More Sustainable' (எனது இலங்கையை மேலும் நிலைபேறு கொண்டதாக மாற்றுதல்) என்ற பிரச்சாரம் தொடர்பான மேலதிக தகவல் விபரங்களுக்கு: https://www.nestle.lk/home/planet